SOND


இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk/online/

Face book:- www.facebook.com/sondngo?fref=ts


# மாதாந்த அறிக்கை ஆடி, 2015

## Social Organizations Networking for Development


RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

435 /9, A Temple Road
Nallur Jaffna


## இதழின் உள்ளே

1. மன்னார்
2. மட்டக்களப்பு
3. அம்பாறை
4. யாழ் ஆகிய நான்கு மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

“We all will Create a Better World”

# மன்னார் மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## அபிவிருத்தியில் அரச சாரா பங்குதாரர்கள் திட்டம்

### சமூக அணிதிரட்டல்

பயிற்சிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றுதல், சனசமூக நிலையங்களை அமைப்பதற்கான பொருத்தமான உறுப்பினர்களை அடையாளம் காணுதல் போன்ற நோக்கங்களுக்கான மாந்தை மேற்கு, முசலி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 22 கிராமங்களில் உள்ள சமூகமட்ட அமைப்புக்களின் 118 ஆண்களும் 174 பெண்களும் மொத்தமாக 292 உறுப்பினர்கள் அணிதிரட்டப்பட்டுள்ளனர். அவர்களில் 72 உறுப்பினர்கள் முஸ்லீம்களும் 220 உறுப்பினர்கள் தமிழர்களுமாவர்.

### மன்னார் மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருடனான திட்டக் கலந்துரையாடல்.

NSA திட்டமானது SOND நிறுவனம் சார்பாக பணிப்பாளர் திரு. ச. செந்துராசா மற்றும் ZOA நிறுவனம் சார்பாக திரு. ஜோர்ச் ஆகியோரினால் மன்னார் மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அவருடைய அலுவலகத்தில் 24/07/2015 அன்று தெளிவுபடுத்தப்பட்டது.

### அமைப்புக்களுக்கான வலுவூட்டல் பயிற்சிகள்

மாந்தை மேற்கு பிரதேசத்தில் உள்ள அமைப்புக்களை வலுப்படுத்தும் நோக்கில் அமைப்புக்களுக்கான ஆவணப்படுத்தல் பயிற்சிகளானது 23,24 /07/2015 ஆகிய தினங்களில் முறையே பெரியமடு பல்தேவைக் கட்டிடம், ZOA அலுவலகம் பள்ளமடு ஆகிய இடங்களில் வளதாரியான திரு. ச. செந்துராசா அவர்களினால் வழங்கப்பட்டது. 20 ஆண்களும் 33 பெண்களும் பங்குபற்றினார்கள். அவர்களில் 45 தமிழ் சமூகத்தினைச் சேர்ந்தோரும் 8 முஸ்லீம் சமூகத்தினைச் சேர்ந்தோரும் உள்ளடங்குகின்றனர்.








SOND

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## பாடசாலை மட்டத்திலான காலநிலை மாற்ற விழிப்புணர்வு

பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தவுள்ள காலநிலை மாற்ற செயற்பாடுகள் மற்றும் போட்டிகள் தொடர்பாக ஆலோசனை பெற்றதற்கமைவாக 04 பாடசாலைகளில் அதிபர், பொறுப்பான ஆசிரியருடன் கலந்துரையாடி போட்டியின் விதிமுறைகள் பற்றிய ஆவணம் வழங்கப்பட்டது.

## அபிவிருத்தியில் அரசுசாரா பங்குதாரர்கள் திட்டம்

*சமூகமட்டக் கூட்டங்கள் மற்றும் சந்திப்புக்கள்*

சனசமூக நிலையங்களை புணரமைப்பது தொடர்பாகவும் அவற்றை இயங்க வைப்பது தொடர்பாகவும் சமூகமட்டத்திலுள்ள பல்வேறுபட்ட அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மற்றும் உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பிரதேச சபைச் செயலாளர் ஆகியோருடனான கலந்துரையாடல்கள் நிகழ்த்தப்பட்டன.

## சனசமூக நிலையங்கள் அமைத்தல்

மேற்படிக் கலந்துரையாடல்களின் பயனாக, மரப்பாலம், உறுகாமம், ஈரளக்குளம், கரடியனாறு ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் செயலற்று இருந்த சனசமூக நிலையங்கள் மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் பங்குடாவெளி,கோப்பாவெளி ஆகிய கிராமங்களில் சனசமூக நிலையங்களை மீளுருவாக்கம் செய்வதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

**எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல்.**
**(Create a Conducive Society for Good Environment for the Future).**

காலநிலை மாற்றம் தொடர்பான கலந்துரையாடல் 07.07.2015ம் திகதி அக்கரைப்பற்று சொண்ட் அலுவலகத்தில் அம்பாறை மாவட்ட இணையத்தின் தலைவர் திரு: வ. பரமசிங்கம் அவர்களின் தலைமையில் இரண்டு நிமிட இறைவணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இக் கலந்துரையாடலில் அரச, அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் 32 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.

இக்கலந்துரையாடலில் காலநிலை மாற்றத்தினை குறைக்கும் வகையிலான 7 செயற்பாடுகள் கலந்துரையாடப்பட்டு கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களுக்கு பொறுப்புக்கள் வழங்கப்பட்டது.

## பாலர் பாடசாலைக்கான களவிஜயம்

**2015.07.27,28,29** ம் திகதிகளில் **Shivacharity** யினைச் சேர்ந்த குமார அவர்களின் தலைமையிலும் பணியாளர்களான பத்மநாதன், விஜயகுமார் முன்னிலையிலும் அம்பாறை மாவட்டத்தில் 06 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 14 பாலர் பாடசாலைகளுக்கு களவிஜயம் மேற்கொள்ளப்பட்டு பாடசாலைகளின் ஆசிரியர் கற்றல் முறைமைகள், மாணவர்களின் செயற்பாட்டு முறைமைகள் போன்றவற்றினை அறிந்து கொள்ளப்பட்டுள்ளது.

**“We all will Create a Better World”**

SOND

# நிதியின்றிய செயற்திட்டம்

அரசசார்பற்ற நிறுவனமென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

## சிறுவர் செயற்றிட்டம்

எமது அமைப்பின் கீழ் செயற்படும் காந்தி சிறுவர் கழக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் பணியாளரான தி. ஜெனிதா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்படுகின்றது. இக்கலந்துரையாடலில் 18 கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

## கலந்துரையாடப்பட்ட விடயங்கள்.

1. சிறுவர்களும் எமது அலுவலகத்திற்கு வருகை தந்து பாவனைக்குதவாத கடதாசிகளைப் பயன்படுத்தி குளுசைப் பக்கற்றுக்கள் தயாரித்து வைத்தியசாலைக்கு வழங்குமாறும், மற்றும் விளையாட்டுப் பொருட்களை கூடியளவு பயன்படுத்தலாம் என்றும் கூறப்பட்டது.
2. ஆரம்ப காலத்தில் கழக செயற்பாடுகளில் இணைந்து கொண்ட சிறுவர்களை மீண்டும் இணைப்பதற்குரிய முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என கூறப்பட்டது.

## சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

சிறுவர்களினால் இரண்டு நடமாடும் நூலகசேவை வாச்சிக்குடா, கோளாவில், அக்கரைப்பற்று 7 பிரிவு, ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களில் நடாத்தப்பட்டது. இதன்போது 92 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டது.

## SOND அமைப்பினால் மேற் கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்

சிறுவர்களின் ஓய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக கிரிக்கெட் வெட் ஆகிய விளையாட்டுப் பொருள் 07 தடவைகள் வழங்கப்பட்டது.

## விவசாயப் பண்ணை

இயற்கை முறையிலான விவசாயம் தொடர்பான விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தலை நோக்காகக் கொண்டு அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் தங்கவேலாயுதபுரம் எனும் கிராமத்தில் பண்ணையில் நாற்று மேடையில் பழமரக்கன்றுகள் உற்பத்தி பண்ணப்பட்டு, தென்னை, வாழை, மரக்கறி பழ மரக்கன்றுகள், தானியங்கள் நடுகை பண்ணப்பட்டு மக்களிற்கு விற்பனைக்காக வழங்கப்படுகின்றது.

## தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலகசேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் 14 தலைப்பில் 111 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# யாழ் மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## விவசாயப் பண்ணை

மிளகாய், வெண்டி என்பன புதிதாக பயிரிடப்பட்டுள்ளதுடன் கொய்யா, பலா என்பன விதை நாற்றுக்கள் போடப்பட்டுள்ளதுடன் மூலிகைத் தாவரங்களிற்கான பதியங்களும் வைக்கப்பட்டுள்ளது. அத்தோடு ஜீவாமிர்தக் கரைசல் தயாரிக்கப்பட்டுள்ளது.

சேதன விவசாயம் தொடர்பான விழிப்புணர்வு Banners பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு பண்ணையின் செயற்பாடுகள் தொடர்பான தொகுப்பு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

22.07.2015 அன்று பண்ணையின் திறப்பு விழா நடைபெற்றிருந்ததுடன் இந்நிகழ்வில் சுவிஸ் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அதிகாரியான மார்ட்டின், நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் செல்வி. நிம்மி மற்றும் நிகழ்ச்சித்திட்ட அதிகாரி திருமதி. தர்சினி ஆகியோர் வருகை தந்திருந்தனர். இந்நிகழ்விற்கு விசேட விருந்தினராக மாகாணசபை உறுப்பினர் திரு.சயந்தன் அவர்களும் ஓய்வு பெற்ற கோட்ட கல்வி அதிகாரி திரு. ரகுநாதன் அவர்களும் ஓய்வு பெற்ற பொறியியலாளர் திரு. யோகேஸ்வரன் அவர்கள் ,விவசாய விரிவாக்க போதனாசிரியர்,கமநலசேவைத் திணைக்கள அதிகாரிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

இந் நிகழ்வில் பண்ணையில் பயிற்சி பெற்று சேதன விசாயத்தைச் செயற்படுத்திய 20 விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டதுடன் கலந்து கொண்டவர்களிற்கு பண்ணையை சுற்றிக் காண்பித்து அவை தொடர்பான செயன்முறை விளக்கங்களும் அளிக்கப்பட்டன.












## மிதிவெடி அபாயக்கல்வி செயற்றிட்டம்

இம்மாதம் MRE செயற்பாட்டில் MRE பணியாளர்களினால் சாவகச்சேரி, கோப்பாய், நல்லூர், பருத்தித்துறை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை ஆகிய 6 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 17 கிராம சேவகர் பிரிவுகளின் செயற்பாட்டுப் பிரதேசங்களில் 7 வகையிலான 68 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 11 வெடிக்காத வெடி நிலையில் உள்ள வெடி பொருட்களும் 9 மிதிவெடிகளுமாக 20 வெடி பொருட்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

02தடவைகள் மிதிவெடி அபாயப் பகுதிக்கு சென்று பார்வையிட்டமைக்கமைவாக அங்குள்ள பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் 30 நபர்களினை தொடர்பு கொண்டு MRE விழிப்புணர்வூட்டும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

48 தடவைகள் சமூக மட்டத்தில் மக்களை சந்தித்திருந்ததனூடாக 847 பேருக்கு MRE விழிப்புணர்வூட்டப்பட்டது.

ஒரு தடவைமக்களுடனான குழுக் கலந்துரையாடல் மூலம் 14 பேருக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது.

08 தடவைகள் வீதி நாடகங்கள் மேற்கொண்டதன் மூலம் 2031 பேருக்கு மிதிவெடி அபாயக் கல்வி விழிப்புணர்வூட்டப்பட்டது.

ஒரு தடவை பாடசாலை மட்டத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை தொடர்பு கொண்டு 31பேருக்கு MRE விழிப்புணர்வு செய்யப்பட்டுள்ளதுடன் 3 தடவைகள் வீட்டுத் தரிசிப்பினை மேற்கொண்டு 53 பேருக்கு MRE விழிப்புணர்வு செய்யப்பட்டுள்ளது.



SOND

## மிதிவெடி அபாயக்கல்வி செயற்றிட்டம்

மொத்தமாக 3006 பேருக்கு இம்முறை எமது MRE பணியாளர்களினால் MRE விழிப்புணர்வூட்டும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மேலும் 954 MRE விழிப்புணர்வூட்டும் துண்டுப்பிரசுரங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.





## தகவல் வளநிலையம்

இம்மாதம் உயரப்புலம் மெதடிஸ்தமிஸன் மகாவித்தியாலயம் , இளையதம்பி இந்து மகாவித்தியாலயம், யா/நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் நடமாடும் நூலகசேவை மேற்கொள்ளப்பட்டமைக்கமைவாக 10 வகையிலான 50 புத்தகங்கள் மாணவர், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## விசேடசெயற்பாடு

விசேட செயற்பாடாக இம்மாதம் 2015.07.10 அன்று MRE செயற்திட்டத்தினூடாக உயரப்புலம் மெதடிஸ்தமிஸன் மகாவித்தியால மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.







**"We all will Create a Better World"**

SOND



## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத் திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.

**“We all will Create a Better World”**